

ஆனந்தாவின்

மறுமலர்ச்சி

மறுமலர்ச்சி

நடிக, நடிகைகள்

G. வரலட்சுமி — ராஜம்மா
E. V. சரோஜா — ரஜினி
T. N. மீனாட்சி — முதலியாரின் மனைவி
G. சுந்தரம்மா — பார்வதி
C. வரலட்சுமி — சுப்பம்மா
மிஸ். மோகனா — வேலைக்காரி

மற்றும்

லலிதா ராவ் B.A., பேபி சியாமளா, ரமணிபாய், பாலா, ருக்மணி.

ஸ்ரீராம் — சேகர்
M. N. நம்பியார் — பிரசாத்
E. R. சகாதேவன் — கோவிந்தன்
C. S. R. — மாணிக்க முதலியார்
லங்காசத்யம் — பியூன் கந்தப்பன்
மாஸ்டர் சுதாகர் — சுதா
ரமணா ரெட்டி — ஆபீஸ் மானேஜர்
S. A. சுப்பராமன் — பப்ளிக் பிராஸிகூடர்
கிட்டன் — டிபென்ஸ் வக்கீல்
கண்ணபிரான் — சர்க்கிள் இன்ஸ்பெக்டர்
V. சௌந்திரராஜன் — சப் இன்ஸ்பெக்டர்
பெருமாள் — பொன்னையன்
வெங்கட் — மில் மானேஜர்

மற்றும்

ராமசாமி அய்யர், தீனரக்ஷகன், ஹமீத், சந்துரு, தியாகராஜன், மாரியப்பன் முதலியோர்

மறுமலர்ச்சி

[கதைச் சுருக்கம்]

ராஜா என்ற பெண், தொழிலாளர் குடும்பத்தில் பிறந்தவள். தந்தை மில்லில் விபத்தில் இறக்கிறான். கோவிந்தன் என்ற பால்ய நண்பன் தவிர அனாதையான ராஜாவுக்குப் புகலிடம் இல்லை. அவனது முயற்சியினால் மில்லில் மூட்டை தூக்கும் வேலை கிடைக்கிறது. ஆனால் மில் மானேஜர் அவளைத் தன் "வலை"யில் சிக்கவைக்க எத்தனிக்கிறான். மானேஜருக்குத் தகுந்த 'பரிசு' கிடைக்கிறது. இருந்தாலும் இரவோடு இரவாக அந்த ஊரைவிட்டே வெளியேறுகிறாள் ராஜா.

பி. ஏ. படிக்க வந்த சேகரை அகஸ்மாத்தாக சந்திக்கிறாள் ராஜா. காதல் ஏற்படுகிறது. பெற்றோரின் அனுமதியின்றி அவளை மணம் புரிகிறான் சேகர்.

மாணிக்க முதலியார் ஒரு ரிடையர்ட் ஆபீஸர். நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவர். சேகரின் தந்தை. "வறட்டு கௌரவம்" அவரது வாழ்க்கையின் ஜீவநாடி. பதினாயிரம் ரூபாய் வரதக்ஷிணை எதிர்பார்த்தார். அவரது ஆசையில் மண் விழுந்தது, தனது மகனின் முட்டாள்தனத்தினால். ராஜாவுக்கு சங்கடங்கள் அதிகரிக்க ஆரம்பித்தது.

பெரிய குடும்பம்—சேகர் ஒருவன் சம்பாதிக்க ஒன்பது பேர் உட்கார்ந்து சாப்பிட—என்னவாகும்? சுற்றுமுற்றும் கடன். கௌரவத்தை விட்டுக்கொடுக்காத முதலியாரினால் இன்னும் பெரும் தொல்லைகள்.

கந்தப்பன் "போர்ட் ஆபீஸ்" பியூன். சேகரின் அண்டை வீட்டுக்காரன். சிறந்த நண்பன். ஏழையாயிருந்தாலும் பலமுறை உதவி செய்தவன். காரணம்? அவன் குடும்பத்தினர் ஒவ்வொருவரும் தங்கள் சக்திக்கான தொழில் புரிந்து சந்தோஷமாகக் காலம் கழித்தனர். ஆனால் ஒரே ஒரு தவறு

செய்தான் கந்தப்பன். "நாளை" என்பதை மறந்து விட்டான்.

சேகரின் தங்கை ரஜினி. படித்த பெண். உல்லாச வாழ்வு பெற ஆசைப்பட்டாள். தந்தையைப்போல படாடோபத்தில் அதிக நம்பிக்கை அவளுக்கு. ஆசைகாட்டி தன் மோச வலையில் அவளைச் சிக்க வைத்தான் "பிரஸாத்" என்ற பணக்கார வாலிபன்.

கந்தப்பன் மனைவியின் உயிருக்கு ஆபத்து ஏற்படுகிறது. ஆபரேஷன் செய்தால் அவளைக் காப்பாற்றமுடியும். அதற்குப் பணம் தேவை. எங்கே போவான் கந்தப்பன்? நிலைமை படுமோசம். சேகரைத் தவிர உதவி செய்வார் யாருமில்லை. ஆபத்தில் தன்னைக் காத்த நண்பனைக் கைவிடுவது எப்படி? ஆபீஸ் கஜானாவைக் கொள்ளையடித்துக் கந்தப்பனைக் காப்பாற்றுகிறான் சேகர். பலன் "சிறைவாசம்."

குடும்பம் திக்கற்ற நிலை. ராஜா மீது மொத்த பாரம் விழுந்தது. நெற்றி வியர்வை நிலத்தில் விழ அரும்பாடு படுகிறாள். ஆயினும் "பிரஸாதுடன் கள்ள நட்பு கொண்டிருக்கிறாள்" என்ற காரணத்திற்காக வீட்டை விட்டு விரட்டப் படுகிறாள். சந்தர்ப்பம் அனுசரணையாக இருக்கிறது.

கடன் தொல்லை தாங்க முடியாத மாணிக்க முதலியார் தனது மூத்த மகள் பார்வதி வீட்டிற்கு "படையெடுக்கிறார்" குடும்பத்துடன். பார்வதி ஒரு 'பத்ரகாளி'. அவளிடம் செல்லுமா முதலியார் வரிசை? ரஜினியை ஒரு கிழவனுக்கு மணமுடித்து "பல ஆயிரம்" சம்பாதிக்க ஏற்பாடு செய்கிறாள் பார்வதி. ரஜினி இருதலைக் கொள்ளி எறும்புபோல் தவிக்கிறாள். வேறு வழியில்லை. வீட்டை விட்டு ஓடுகிறாள், காதலன் பிரஸாதிடம்—தன்னைக் காப்பாற்றுவான், மனைவியாக ஏற்றுக்கொள்வான் என்று. பிரஸாதோ பசுத்தோல் போர்த்த புலி. அவளை மறுபடியும் கற்பழிக்க டிராவெலர்ஸ் பங்களாவுக்கு அழைத்துச் செல்கிறான். ரஜினிக்கு விஷயம் அப்போதுதான் விளங்குகிறது. மணமுடிக்க மறுத்த

பிரஸாதுடன் போராடுகிருள். கோபங்கொண்ட பிரஸாத் அவளைக் கொல்ல பிரயத்தனம் செய்கிருன். கோவிந்தன் அங்கு "வாட்ச்மேன்." அவளைக் காப்பாற்ற முயல்கிருன். கோவிந்தனுக்கும் பிரஸாதுக்கும் கைகலக்கிறது. முடிவில் பிரஸாத் இறக்கிருன். கோவிந்தனைப் போலீஸார் கைது செய்கின்றனர். தான் நிரபராதி என்கிருன் கோவிந்தன். அதற்கு சாக்ஷியம் 'ரஜினி' ஒருவள் தான்.

சிறையிலிருந்து வெளிவந்த சேகர்கூட ராஜாவை சந்தேகித்து விரட்டியடிக்கிருன்.

போலீஸாருக்கு ராஜா மீது சந்தேகம் ஏற்படுகிறது.
ராஜா என்ன செய்வாள்? அவளுக்கு யார் துணை?
கோவிந்தன் குற்றவாளியா? நிரபராதியா?
ரஜினி என்னவாளுள்?
ராஜாவின் கதி என்ன?

வெள்ளித் திரையில் காண்க!

பாட்டுகள்

[1]

பாடியவர் : **T. M. சௌந்திரராஜன்**

ஸாகி : வான வீதி தன்னில் ஆதவன் உதிக்கின்றான்
வாழ்வில் ஒளிவீச வருகின்றான்
மானிடனே நீ கண் துயிலாதேடா
மறுமலர்ச்சி காண எழுந்திரடா

பல்லவி : விந்தை மிகுந்த உலகமடா—பெரும்
விசித்ரமான சமூகமடா
சிந்தனையின்றி கண்ணை மூடி நீ
காலம் கழிக்கும் நாளல்லடா (விந்)

1. பழமையை மறந்திடடா—காலப்
புதுமையை பார்த்திடடா
நிலமைக்கேற்ப வாழ்ந்துலகில்
மறுமலர்ச்சி பெற்றிடடா (விந்தை)

2. உண்டுறங்கிக் காலம் தள்ளாதே—புவி
முன்னேறுது பாருன் கண்ணாலே
ஊக்கமும் உள்ளத்தில் நேர்மையும் கொண்டு
உழைத்தாலே நன்னலம் காண்பாயடா (விந்தை)

(ராஜா மில்லை விட்டு வெளியேறிய பின்)

1. அன்பு மொழிகளும் பேசிடுவார்—உன்னை
அண்டி உபதேசம் செய்திடுவார்
தன்னலம் கொண்டே காட்டிக் கொடுப்பார்
தயவின்றி உன்னை ஏசிடுவார்

2. வஞ்சம் நிறைந்த உலகமடா—இதை
நம்பியதுந்தன் தவறிதடா

சஞ்சலம் விட்டு நெஞ்சம் துணிந்து
சுதந்திரமாக வாழ்ந்திடடா (விந்தை)

(சேகரின் மனதிலே போராட்டம்)

1. நன்றிதனை மறவாதே—பிறர்க்கு
உதவ நீ தயங்காதே
வானிடிந்தாலும் வையம் புரண்டாலும்
குன்று மனோதிடம் கொள்ளடா

2. சிந்தனை செய்தல் ஆபத்தடா—நீ
செய்நன்றி மறத்தல் தவறடா
உன் கையில் ஒருபிர் ஊசலாடுதே
என் செய்யப் போகிறாய் சொல்லடா (விந்தை)

(குடும்ப பாரத்தை ஏற்றிய பின், ராஜா—)

பாடுபடுபவன் ஒருவன்—அதன்
பலனடைவான் மற்றொருவன்
நாடு கண்ட இந்த மூட வழக்கத்தை
மாற்றிட வல்லார் இல்லையோ (விந்தை)

(மாணிக்க முதலியார் பார்வதி வீட்டிலிருந்து
வெளியேறுகிறார்)

1. ஜம்பப் பேச்சும் வாழ்வில் நின்றதா—உன்
ஆடம்பரம் ஏதும் வென்றதா
சாண் வயிற்றுக்காக தாழ்வுடன் கைநீட்டி
மானமிழந்து நீ போவதா

2. வயதும் ஆகிடவில்லையா—இன்னும்
உலகானுபவமும் வல்லையா—பிறர்
தயவின்றி எந்நாளும் வாழவேண்டுமென்ற
எண்ணமே உந்தனுக்கில்லையா

3. பாடுபட்டு பணி செய்யாமல்—நாளை
வாழ்ந்திட எண்ணமும் இல்லாமல்

வீணில் பணத்தை வாரி இறைத்தால்
வீதியில் நின்று தவிப்பாயடா (விந்தை)

(மாணிக்க முதலியாருக்கு கண் திறந்தது)

1. ஒன்று பட்டாலுண்டு வாழ்வு—அது
இல்லையென்றால் வரும் தாழ்வு
இந்த உண்மையறிந்து நன்மையடைந்து
உலகினில் முன்னேறிச் செல்லடா

2. மடமைப் பேய்தனை விரட்டடா
மயக்கும் சோம்பலை துரத்தடா
மமதையாம் அந்த மாயச் சுழலில்
மதிதன்னை இழக்காதேடா (விந்தை)

[2]

ராஜா, சேகர் : பாடியவர்கள் : A. M. ராஜா, லீலா

சேகர் : நானும் ஒரு மனிதனா
எனதும் ஒரு இருதயமா........ (நானும்)

பொறுமையின்றி மதியிழந்து
ஏனிவ்விதம் செய்தேனோ
பிறரின் மனதை அறிந்திடாமல்
ஏனோ முரடன் போலானேன் (நானும்

ராஜா : நேரும் பலனை உணர்ந்திடாது
ஏனவ்விதம் பார்த்தேனோ
பிறரின் மனதை நோகச்செய்து
பெரும் பிழையேன் செய்தேனோ

சேகர் : பாதையோடு போகிறவர்க்கு
ரத்னமாலை கிடைப்பானேன்
பூஷணமென அணியும போதில்
கைதவறிப் போவானேன் (நானும்)

ராஜா : கைதவறிய நின் ரத்தினம்
புழுதி மீதில் நிலைத்திடுமா

அன்பை யறிந்தும் தலைமீதினில்
அணிவதையும் தடுத்திடுமோ

இருவரும் : வானில் மேகத் திரையும் விலகி
மனதில் களங்கம் போனதே
வெண்ணிலவினில் நம் பிரேமையும்
இன்பம் பொங்கக் காணுதே

சேகர் : நானும் ஒரு மனிதனே
எனதும் ஒரு இருதயமே

ராஜா : நானும் ஒரு ஜீவனே
எனதும் ஒரு இருதயமே

[3]

பியூன் கந்தப்பன் பாடியவர் : **P. நாகேஸ்வரராவ்**

1

கையும் காலும் நல்லாயிருந்தா
கஷ்டப் படவும் இஷ்டமிருந்தா
கெட்ட காலமும் ஈனவாழ்வதும்
பாரில் ஏதென என்றும் வராதென
அப்படிச் சொன்னார் எங்கப்பா
சொன்னது செய்வார் கந்தப்பா

2

முகத்தினில் மீசை புருஷனுக்கந்தம்
ஜடையினில் பூவதும் பெண்ணுக்கந்தம்
அந்தமதில் ஆநந்தம் உண்டென
அப்படிச் சொன்னார் எங்கப்பா
சொன்னது செய்வார் கந்தப்பா

3

மேளமெதுக்கு தாளமெதுக்கு
உற்றார் உறவினர் சம்மதமெதுக்கு

எண்ணிப் பார்த்தால் ஆணும்பெண்ணும்
மனமது கலந்த மணமே மணமென
அப்படிச் சொன்னார் எங்கப்பா
சொன்னது செய்வார் கந்தப்பா

4

நம்முடன் வருவது ஏதுமில்லை
நம்முடன் போவது ஏதுமில்லை
இருக்கிற வரையில் வயிற்றுக்கு தின்று
எல்லோருடனே இன்பமாயிரு நீ
சுகமுடன் வாழ்ந்திடும் வாழ்வே வாழ்வென
அப்படிச் சொன்னார் எங்கப்பா
சொன்னது செய்வார் கந்தப்பா

[4]

டான்ஸ் டிராமா பாடியவர்கள் : **A. P. கோமளா, ஜிக்கி**

பெண் : மனமறியாத பேரானந்தமேனோ
குதூகலமே என்மனமதிலே—இத்தினமதிலே (மன)

ஆண் : ஆநந்தரூப அலங்காரதேவி நீ
என்சிங்கார ராணிநீ—நின்
நவயௌவன லாவண்ய லீலையில்
மாதுர்ய வேளையில்
மனமதில் பிரேமை துள்ளி விளையாட
மனங்கனிந்தேன் உன்நினைவாலே—
என் பிரிய தருணி (மன)

பெண் : ஆடவர் தேன்மொழி பேச்சினிலே விஷம்
உள்ளம் முழுவதும் விஷம்
ஆண்களை நம்பிடலாகாது பாரிலே
செய்வார்கள் மோசமே

ஆண் : அஞ்சுவதேனோ நம்பிடலாகாதா
பிரமாணமிதே என் ஆருயிரே—என் ஆருயிரே

இருவரும் : இணைபிரியாமல் என்னாளுமே வாழ்வோம்
நல் யோகமிதே வைபோகமிதே

பெண் : ஆசை கை கூடுமே
ஈடில்லாத செல்வமே
இணையில்லாத தங்கமே
மகா உன்னத பாக்கியமே
காண்போம் இன்பமே
பிரியரும் வந்து கூடி விளையாடும் போதில்
ஏனிந்த சந்தோஷமென்றே கேட்டிலோ
என்ன மொழி சொல்வேனே பேதை நான்
(ஆசை)

ஆண் : புதுமையும் ஏனோ பெண்ணே
நின் விழியின் நூதனமென்னே
சங்கோசம் ஏனோ கண்ணே

பெண் : பிரேமை கனிந்ததனாலே
குறையில்லை இனிமேலே
ஈடில்லை ஜகமேலே
பிரேமை கனிந்ததனாலே

ஆண் : ஆ......

பெண் : ஊம்.........
பிரேமை கனிந்ததனாலே

ஆண் : பேசாதே நீ நில்லு
போ போ எட்டசெல்லு
உனக்காக என் உற்றார்களை
துறந்திடுவேனே—நான்
எதிராடுவேனே

பெண் : செய்த பிரமாணம் மறந்தனையோ

ஆண் : பேசாதே நீ போ

பெண் : ஆ......

பெண் (தொகையரு)

ஓ! மானிலம் வாழ் மாசிலா சோதரி
மாமணிகாள்! ஜகமீதிலே அனுதையென்
சோகக் கதை கேளீரோ! நிலையிலாக்
காதலே நிஜமென நம்பி, விலையிலா
என் கற்பதனை பலி தந்தேனே,
அவமானம் தன்னை நான் தாளேனய்யோ
மார்க்கமே துள்ளதினி என் மரணமே
தான் கதியோ

[5]

ரஜினி, பிரஸாத்: பாடியவர்கள்: A. M. ராஜா, ஜிக்கி

ரஜினி: மாலையிதே நல்ல வேளையிதே
ஏகாந்தமிகும் எழில் சோலையிதே

பிரஸாத்: சோலையில் தென்றலும் வீசிடவே—மிக
ஆசையும் மேவுது ஆனந்தம்

ரஜினி: கூடியே புள்ளினம் ஓடிடுதே—அதில்
பிரேமையும் திகழுதே ஆனந்தம்—
அதே அந்தம் (மாலை

பிரஸாத்: ஜோடிப் புருவினில் ஒன்றிங்கே—தன்
பேடையைச்சேர்ந்திட ஏங்குதுபார்

ரஜினி: ஒரு மனம் ஏங்கிட ஏது பலன்—
இரு மனம் கலந்தாலன்றோ
ஆனந்தம்—
அதே அந்தம் (மாலை)

ரஜினி: தனிமையில் வாடுமென்
வாழ்வினிலோர்
துணையதும் சேர்ந்திடில் பாக்கியமே

பிரஸாத்: கனவதும் நினைவாய் கூடிடுமோ
—சுப
தினமதும் இதுவே ஆகிடுமோ—
இன்பம் நேர்ந்திடுமோ (மாலை)

சுதாகர்

பாடியவர் : **ராணி**

தெரிஞ்சதுங்க எல்லாம் தெரிஞ்சதுங்க
இந்த உலக ரகஸ்யம் புரிஞ்சதுங்க (தெரி)
தெரிஞ்சதுங்க எல்லாம் தெரிஞ்சதுங்க
நம் வாழ்க்கையின் உண்மையும் புரிஞ்சதுங்க (தெரி)
வேலையில்லாத சோம்பேறிக்கு
உலகினில் இடமேயில்லிங்க
பாடுபடும் பாட்டாளிகளுக்கினி
குறையேதுமே இல்லிங்க (தெரி)
வாழ்விலே அதிக ஆடம்பரமாய்
வாழ்வோர்க் கின்பம் இல்லிங்க
உடல் வணங்கி தொழில் செய்தால்
குறையேதுமே இல்லிங்க (தெரி)
சக்திக்கான தொழில் செய்வதிலே
அவமானம் ஏதுமே இல்லிங்க
பிறரது தயவினில் வாழ்வதைவிட மிக
கேவலம் வேறே இல்லிங்க (தெரி)
பணமே பெரிதென நினைக்கின்றாரே
பணி செய்யாவிடில் பணமேது
பஞ்சம் வருவதும் கஷ்டம் வருவதும்
காரணமிப்போ தெரிஞ்சதுங்க (தெரி

[7]

ராஜா

பாடியவர் : **கண்டசாலா**

(தொகையரு)
இதுதானா—பாரின் ரீதியும்—இதுதானா
(பாட்டு)
பொல்லா விதியும் வேளையும் கூட
இல்லாப்பழியும் சேருதே
நல்ல மனங் கொண்டுதவி புரிந்தால்
அல்லல் படவும் நேருதே (பொ)
நீதியும் நேர்மையும் அறியா மாந்தர்

பேசிடுவார் அபவாதமே
மேதினியில் நல்லோர்க்குமே—கொடும்
சோதனை வாழ்வில் நேருமே (பொ)
ஏது நேர்ந்திடினும் மனங்கலங்காதே
நன்னெறி வேண்டும் வாழ்விலே
இன்றுனை ஏசிய லோகம் நாளை
வந்தனை செய்தே போற்றுமே (பொ)
இருளும் ஒளியும் வருவது போலே
இன்பமும் துன்பமும் தோன்றுமே
பொறுமை உடையார் முடிவிலே பெரும்
நலமடைவார் தம் வாழ்விலே (பொ)

[8]

பாடியவர் : **லீலா**

ராஜா

ராஜாவின் மனச்சாட்சி :

(தொகையரு)

வாதித்ததுந்தன் தவறுதானே
அபராதி நீயோ.........
மனமறியா பிழைதானே.........

(பல்லவி)

ஏனோ பிழை செய்தாயோ
உந்தன் தவறிதுதானே (ஏனோ)

(அ. ப.)

பிழையேதும் நேர்ந்திடாதென
நினைந்தாயோ பேதை நீ
அவருள்ளம் நொந்தபோதினில்
மனம் புண்ணாகிடவே செய்வதா
பாவி உன் சோதனை காலமா

ராஜா : ஏனோ பிழை செய்தேனோ
எந்தன் தவறிதுதானோ (ஏனோ
அனுமான மெனும் அனலாலே
அபவாதமெனும் இடியாலே
மனமெல்லாம் நொந்து போனதே
என் விதியும் இனி ஏதாகுமோ
வாழ்விதே சூன்யமாய் போகுமா (ஏனோ)

டெக்னீஷியன்கள்

அஸோஷியேட் டைரக்ஷன்	— S. A. சுப்பராமன்
கதை	— "தாபி" & S. A. சுப்பராமன்
வசனம்	— S. A. சுப்பராமன்
பாடல்கள்	— M. S. சுப்பிரமணியம்
சங்கீதம்	— பெண்டியாலா நாகேஸ்வரராவ்
படப்பிடிப்பு	— ஜாகீர்தார், N. பிரகாஷ், R. R. சந்திரன்
ஒலிப்பதிவு	— ராமச்சந்திரன், முகுந்தன், சூரிய நாராயண
எடிட்டிங்	— வீரப்பன், மார்த்தாண்டம்
நடனம்	— வெம்படி சத்தியம்
ஆர்ட்	— கொட்காங்கர்
மேக்கப்	— மங்கையா, சொர்ணப்பா, பத்ரையா
ஸ்டில்ஸ்	— "ஜே ஹிந்த்" சத்தியம்
புரொடக்ஷன் மானேஜர்	— G. V. ராவ்
உதவி	— C. குமார்
அஸிஸ்டெண்ட் எடிடர்	— P. ஸ்ரீனிவாசன்
பின்னணிப் பாடகர்கள்	— P. லீலா, ஜிக்கி, ராணி, A. P. கோமளா, T. M. சௌந்தரராஜன், கண்டசாலா, A M. ராஜா, P. நாகேஸ்வரராவ்.

டைரக்ஷன் :

K. S. பிரகாஷ்ராவ், லங்கா சத்தியம்

தயாரிப்பு :

C. V. ரெட்டி, P. சுப்பராயுடு, S. S. ரெட்டி, J. V. சுப்பாராவ்

N. B : இப்படத்தில் பாடப்பட்டிருக்கும் பாடல்கள் யாவும் H. M. V. ரிகார்டில் கேளுங்கள்